# வாய்மொழி இலக்கியங்களில் சமூக விமர்சனம் - ஒரு கண்ணோட்டம்

வானதி பகிரதன்

வாய்மொழி இலக்கியங்கள் என்பது பரம்பரை பரம்பரையாக மக்களிடையே செவிவழியாக கேட்டு வந்த எழுதா இலக்கியங்களை குறிப்பதாகும். எழுதா இலக்கியங்களாகிய வாய்மொழி இலக்கியங்களே உலகில் முதலில் தோன்றியன என்பதையும் எழுத்து முறை வழக்கிற்கு வருவதற்கு முன் எல்லா இலக்கியங்களும் வாய்மொழியாகவே விளங்கின என்பதையும் ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். பழைய, இடைக்கால எழுத்திலக்கியங்கள் யாவும் எழுத்தறிவு பெற்றவர்களுக்கே உரியவை. எழுத்தறிவு பெற்றவர் முன்னர் குறைவாகக் காணப்பட்டதால் குறைந்த பகுதியினரையே அதாவது சாதி,பால், பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்றவர்களையே அது சென்றடைந்தது. வாய்மொழி இலக்கியங்கள் அனைவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியவை என்பதால் அவை அனைவரையும் சென்றவைதோடு சமூகத்தின் எதிர்புணர்வு, மாற்றுக் கருத்துக்கள் என்பன எழுத்திலக்கியங்களை விட வாய்மொழி இலக்கியங்களிலேயே அதிகளவு காணப்படுகின்றதெனக் கூறலாம்.

சமூகதத்தில் மேல்வர்க்கத்தினர், கீழ்வர்க்கத்தினர் என இரு வகைக் குழுவினர் காணப்படுகின்றனர். பொருளாதார ரீதியாக சொத்துடமையும், அரசியல் ஆதிக்கமும், சாதி, பால், அந்தஸ்து நிலையில் உயர்ந்தவர்களும் மேல் வர்க்கத்தினராகக் கொள்ளப்பட்டனர். இம்மேலோருக்கு நேர்மாறான வாழ்க்கையுடையவர்கள் அடிநிலை மக்களாவர். இவர்கள் முற்குறிப்பிட்ட பொருளாதார, அரசியல் ஆதிக்கம், சாதி, பால், அந்தஸ்தில் ஏதாவதொனிறில் அல்லது அனைத்து நிலையிலும் குறைந்தவர்களாவர். இக் கீழ்வர்க்கத்தினர் மேல்வர்க்கத்ததினரால் சுரண்டபட்ட போது மேல்வர்க்கத்தினருக்கு எதிராகத் தம் எதிர்ப்புணாலுவுகளை வெளிப்படுத்தியுள்ளமையை காணலாம்.

வாய்மொழி இலக்கிய வடிவங்களில் இத்தகைய எதிர்ப்புணர்வு எவ்வாறு வெளிப் படுத்தப்படுகின்றன என்பதையும் அவை எத்தகை தளங்களில், வடிவங்களில் வெளிப்படுத்தப் படுகின்றன என்பதையும் தக்க சான்றுகள் காட்டி நிரூப்ணம் செய்வதே இவவாய்வின் நோக்கமாகும்.

சமூகத்தில் அதிகாரம் பெற்ற ஆளும் வர்க்கத்தினர், காலணித்துவத்தினர், பொருளாதார ரீதியில் உயர்ந்தோர், ஆணாதிக்கம் உடையோர் போன்றோருக்கெதிராகவும் சமூகத்தில் நிலவிய பஞ்சம், பட்டினி, அவலங்களுக்கெதிராகவும் எதிர்ப்புணர்வுகள் வெளிப்படுத்தப்படுவதை வாய்மொழி இலக்கியங்களை சான்றுகாட்டி நிறுவுவதே இவ்வாய்வு அமைந்திருக்கும்.

**திறவுச் சொற்கள்:** வாய்மொழி இலக்கியம், பரம்பரை, சமூக வர்க்கம்

*சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம். pahi18@yahoo.com*